மாறுபாடாக உள்ள நிலையில் இச்சம்பவத்தில் தீவிர விசாரணை தேவைப்படுகிறது. இந்த ஏழைப் பெண்ணின் மரணம் குறித்து பெற்றோருக்கும் கணவனுக்குமே சந்தேகம் இருப்பதாலும், இதனை ஒரு சிறப்பு நேர்வாகக் கருதி குற்றப் புலனாய்வுத் துறை (C.B., C.I.D.) விசாரணைக்கு இந்த வழக்கு மாற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

(திரு. பி.ஆர். சுந்தரம், டாக்டர் க. கிருஷ்ணசாமி ஆகியோர் எழுந்து நின்றனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி.ஆர். சுந்தரம், உட்காருங்கள், டாக்டர் க. கிருஷ்ணசாமி.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நேற்று காலையிலே 9 மணிக்கே கொண்டு வந்து உங்கள் அறையிலே கொடுத்துவிட்டேன். நான்தான் முதலில் கொடுத்தது. அப்படியிருக்கும்போது என்னை ஏன் கூப்பிடவில்லை? நான்தான் முதலில் கொடுத்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னிடத்தில் இருக்கிற நேரப்படி நீங்கள் முதலில் கொடுக்கவில்லை.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: நான்தான் முதலில் கொடுத்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எனக்குக் கொடுத்த விவரப்படி நீங்கள் முதலில் இல்லை.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: நான்தான் முதலில் கொடுத்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படியிருந்தால் அதை மாற்றிக்கொள்கிறேன். ஆனால் இங்கே பாருங்கள். திரு. டி. மணி, திரு. ஜே. ஹேமச்சந்திரன் - 8-49, திரு. கே. சுப்பராயன், 8-45, டாக்டர் க. கிருஷ்ணசாமி - 9-13.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: உங்களுடைய அறைக்கு வந்து நீங்கள் வந்த பிறகு கொடுத்தது. நான் பேரவைத் தலைவர் அறைக்கு 9 மணிக்கு முன்பாகவே வந்துவிட்டேன். பேரவைத் தலைவர் அவர்கள் 9-12 மணிக்கு வந்தீர்கள். அதற்கு நான் எப்படிக் காரணமாக இருக்க முடியும்? நான் 9 மணிக்கு முன்பு வந்துவிட்டேன். அறையில் பேரவைத் தலைவர் இல்லை, அதனால் நான் கொடுக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது என்னிடம் கொடுத்த நேரம் இல்லை. இது செயலரிடம் கொடுத்த நேரம்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: பேரவைத் தலைவரிடம் கொடுக்க வேண்டுமென்பதற்காக....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னிடம் கொடுத்த குறிப்பின்படி, நீங்கள் நான்காவதாகக் கொடுத்திருக்கிறீர்கள். நீங்கள் இல்லையென்று சொன்னால், என்னுடைய அறைக்கு வாருங்கள், நான் விசாரித்துச் சொல்கிறேன். திரு. பி.ஆர். சுந்தரம்.

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த செவ்வாய்க்கிழமை அன்று கரும்பு விவசாயிகள் தங்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்திக் கோட்டை முன்பு....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான்தான் அனுமதி இல்லை என்று சொல்லிவிட்டேனே, அதற்குப் பிறகு ஏன் திரும்பப் பேசுகிறீர்கள்?

திரு. பி.ஆர். சுந்தரம்: போலீஸ் தடியடி....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான்தான் அனுமதி இல்லை என்று சொல்லிவிட்டேன். நான்தான் அனுமதி கிடையாது என்று சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) பேசவிடமாட்டேன் என்று சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) முடியாது என்று சொல்லிவிட்டேன். பிறகு, எப்படி mike கொடுப்பார்கள்? நான் அனுமதி கொடுக்கவில்லை என்று சொன்னால் mike எப்படி உங்களுக்குக் கொடுப்பார்கள்?

திரு. பி.ஆர். சுந்தரம்: இது விவசாயிகளுடைய....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உங்களுடைய எதிர்ப்பைக் காட்ட வேண்டுமென்றால் "வெளிநடப்புச் செய்கிறேன்" என்று சொல்லுங்கள். "பேரவைத் தலைவர் உத்தரவை எதிர்த்து வெளிநடப்புச்

2000 மார்ச் 30] [பேரவைத் தலைவர்]

செய்கிறேன்'' என்று சொல்லுங்கள். எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. நீங்கள் எப்படி அனுமதி மறுத்தீர்கள் என்று என்னைக் கேட்கக்கூடாது.

திரு. பி.ஆர். சுந்தரம்: Request-தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நானும் Request-ஆகத்தான் சொல்கிறேன், அனுமதி மறுத்துவிட்டேன் என்று. நான் ரொம்ப சாந்தமாகச் சொல்கிறேன். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

திரு. பி.ஆர். சுந்தரம்: விவசாயிகள்மீது போலீஸார் தடியடி நடத்தியிருக்கிறார்கள். அவர்களுடைய நியாயமான கோரிக்கையைத்தான் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அந்த விவசாயிகள்மீது நடவடிக்கை எடுத்து அடித்த அந்த போலீஸ்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த விவசாயிகள் விடுதலை செய்யப்பட்டுவிட்டார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

(ஆ) பேரவை புறவாரத்தில் உளவுத் துறையினர் அமர்தல்

திரு. சி. ஞானசேகரன்: Point of Order. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையினுடைய இறையாண்மை குறித்த ஒரு பிரச்சினையை நான் கிளப்ப விரும்புகிறேன். இங்கே அவை கூடிய பிறகு, சட்டமன்ற உறுப்பினர்கள் லாபியிலே இருக்கக்கூடிய இடத்தில் காவல் துறையைச் சார்ந்த உளவுத் துறை நபர்கள் எல்லாம் அமர்ந்து கொண்டு, நடமாடிக் கொண்டிருப்பது என்பது சரியல்ல. இது இந்த அவையினுடைய உறுப்பினர்களுடைய உரிமையைப் பொறுத்த விஷயம். ஆகவே, தங்களுடைய ஆளுகைக்கு உட்பட்ட இந்த அவையினுடைய வளாகத்திற்குள்ளே உளவுத் துறையைச் சார்ந்தவர்கள், அவை கூடிய பிறகு, அவை முடிகிற வரையில் யாரும் அங்கே லாபி இருக்கையிலே அமர்ந்து பேசக்கூடாத ஒரு நிலையைத் தாங்கள் உருவாக்கித் தரவேண்டும் என்கிற பணிவன்பான வேண்டுகோளைத் தங்கள் முன்னாலே பதிய வைக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது உண்மையாக இருக்கும் பட்சத்தில் நான் நடவடிக்கை எடுப்பேன். முதலமைச்சருடைய பாதுகாப்புத் துறை அதிகாரிகள் பக்கத்திலே உட்காருவதில் ஒன்றும் தவறில்லை. அவர்கள் ஒன்றும் உளவுக்காக வரவில்லை. முதலமைச்சரின்